**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8069867

C

1. District : திருநெல்வேலி மாவட்டம் | PS காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year ஆண்டு : 2020 | FIR No. மு.த.அ. எண் : 11/2020 | Date நாள் : 23.12.2020

2. (i) Act சட்டம்: IPC — Sections பிரிவுகள்: 409, 420
   (ii) Act சட்டம்: PC Act 1988 2018 — Sections பிரிவுகள்: 13 (2) r/w 13 (1) (c)
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல் : 19.11.2009, 02.02.2011
   Date to நாள் வரை : 13.04.2010, 10.11.2013
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at P.S. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.12.2020 — Time நேரம் : 13.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from P.S: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — அரசு ஆரம்ப சுகாதார நிலையம், பத்தமடை, 20 Km West.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — D.ராபின் ஞானசிங்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — திரு.T.தேவதிரவியமணி.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 04.04.1974
   (d) Nationality : நாட்டினம் — இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — காவல் ஆய்வாளர்
   (g) Address : முகவரி — ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு திருநெல்வேலி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி.Dr.R.வெள்ளையம்மாள், க/பெ.திரு.செல்லத்துரை, முன்னாள் மூத்த உதவி மருத்துவர், ஆரம்ப சுகாதார நிலையம், பத்தமடை, திருநெல்வேலி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. ஐயா, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையின் தலைமை அலுவலக இயக்குனர் அவர்களின் தொடக்க விசாரணை அறிக்கை PE37/2018/PHC/Ti-ன்படி கிடைத்த அறிவுரைப்படி, இன்று 23.12.2020 மதியம் 13.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2020 சட்டப் பிரிவு 409, 420 இந்திய தண்டனை சட்டப்படியும், ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 13(2) உ/இ 13(1)(c)ன் படியும் திருநெல்வேலி மாவட்டம் பத்தமடை ஆரம்ப சுகாதார நிலைய முன்னாள் மூத்த உதவி மருவத்துவர் திருமதி.ஆர்.வெள்ளையம்மாள் என்பவர் மீது வழக்கு பதிவு செய்தேன். குற்றம் சாட்டப்படும் திருமதி.ஆர்.வெள்ளையம்மாள் திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் மூத்த உதவி மருத்துவராக 19.11.2009 முதல் 13.04.2010 மற்றும் 02.02.2011 முதல் 10.11.2013 ஆகிய இரு காலகட்டங்களில் பணியாற்றியுள்ளார். ஊழல் தடுப்பு சட்டம் 1988, பிரிவு 2(1)(சி)-ன் படி திருமதி.வெள்ளையம்மாள் ஒரு பொது ஊழியர் ஆவார். தொடக்க விசாரணையில் Government of India, Ministry of Health & Family Welfare, Department of Health & Family Welfare, Nirman Bhawan, New Delhi என்ற தலைமையில் மத்திய மற்றும் மாநில

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 23/12/20
D. Robin Gnanasingh

Name: பெயர் ....P.........
Rank: நிலை ............ No. எண் .........
VAC, Tirunelveli

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23/12/20 at 13.45 hrs.

அரசு இணைந்து மருத்துவ துறையின் மூலம் நோயாளிகளுக்கும், பெண்களுக்கும் பயன்படும் வகையிலும் பொதுமக்களின் உடல் நலத்தை மேம்படுத்தும் வகையிலும், மேம்படுத்தப்பட்ட வகையிலான மருத்துவ சிகிச்சையை கொடுக்க வேண்டியும், நீண்ட நாட்கள் நலமுடன் வாழ வேண்டியும், நோயாளர் நல சங்கங்கள் மூலம் பொது மக்களுக்கு நலத்திட்டங்களை செயல்படுத்துவர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையில் நல்லுறவு ஏற்படுத்தும் வகையிலும், நோயாளிகளுக்கு கொடுக்கும் சிகிச்சைகளுக்கு தேவையான உபகரணங்களை வாங்கவும், நலத்திட்டங்கள் தொடர்பாக மருத்துவ முகாம்கள் கிராமங்கள் மற்றும் பள்ளிகளில் நடத்துவது போன்ற பல்வேறு திட்டங்களுக்கும் கீழ்குறிப்பிடும் தலைப்புகளிலும் நிதி வழங்கிவருகிறது. (1) JSY என்ற ஜனனி சுரக்ஷ் யோஜனாகுடும்ப நலத்திட்டம், (2) MRBS முத்துலட்சுமிரெட்டி பேறுகால நிதியுதவி திட்டம், (3) PWS சேசன்ட் வெல்பர் செசைட்டி, (4) NRHM தேசிய ஊரக சுகாதார இயக்கம், (5) இலவச இரத்த தான முகாம்கள் நலத்திட்டம், (6) வருமுன் காப்போம் VKT மருத்துவ முகாம்கள், (7) தேசிய போலியோ சொட்டுமருந்து முகாம், (8) நடமாடும் மருத்துவக்குழு Mobile camp மூலம் நோயாளிகளுக்கு செய்யும் சேவை, (9) RBSK பள்ளி சிறார் குழந்தைகள் நலத்திட்டம் மற்றும் (10) கர்ப்பிணி பெண்களுக்கு கொடுக்கும் AN & PN dite ஆண்டிநோடல் & PUSTNATENT dite என்ற இலவச உணவு வகைகள். கர்ப்பிணி பெண்களுக்கு இலவச ஆம்புலென்ஸ் சேவை ஆகியவைகள் ஆகும். மேற்படி தலைப்புகள்படி வழங்கப்படும் நிதியினை எவ்வாறு யார் யார் மூலம் செலவு செய்வது என்றும், கணக்குகளை எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்றும் முறையாக தகுந்த பதிவுகளுடன் பராமரிக்கப்படவேண்டிய ஆவணங்களை குறித்தும் கூறப்பட்டுள்ளது.

NHM நேசனல் ஹெல்த் மிசன் மூலம் வழங்கப்படும் நிதிகளை வட்டார அலுவலகங்கள் பெற்ற பின்பு அதை பயன்படுத்தும் பொறுப்பு அந்த வட்டார மருத்துவருடையது. செலவு கணக்குகளை மருத்துவ அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பாளர் மற்றும் கணக்கு வழக்கு பரமாரிக்க உதவியாளர்களும் நியமிக்கப்பட்டு காசோலை மற்றும் வவுச்சர்களில் வட்டார மருத்துவ அலுவலர் கையொப்பம் செய்து பணம் வழங்க வேண்டும். இவ்வாறு கொடுக்கப்படும் நிதிகளையும் அதன் மொத்த செலவுகளையும் FMR (Fund Management report) மூலம் துணை இயக்குனர் அலுவலகத்தில், கணினி software மூலம் பராமரிக்கப்படும். அவ்வாறு பராமரிக்கப்படும் கணக்குகள் GOI மூலம் குறிப்பிட்ட கால இடைவெளியில் மதிப்பாய்வு கூட்டங்கள் மூலம் C&AG (Comptroller and Auditor General of India) சரிபார்க்கப்பட

வேண்டும். இந்த கணக்குகளை சரிபார்க்க முறையான அதிகாரிகள் குழு நியமிக்கப்படுவார்கள் என்றும், பத்தமடை வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, குற்றம்சாட்டப்படும் திருமதி.வெள்ளையம்மாள் 19.11.2009 முதல் 13.04.2010 வரையிலும் 02.02.2011 முதல் 10.11.2013 வரையுள்ள காலகட்டங்களில் வட்டார மருத்துவராக பணியில் இருந்தபோது NRHM திட்டத்தின் மூலம் பெறப்பட்ட பல்வேறு நிதிகளை சரிவர பராமரிக்காமலும், விதிமுறைகளை பின்பற்றாமலும், ஆவணங்களை சரிவர பராமரிக்காமலும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு, பொதுமக்களுக்கும், நோயாளிகளுக்கும் மற்றும் வழிமுறைகள்படி செலவு செய்யப்படவேண்டிய நிதிகளை கையாடல் செய்த விபரம் 2014 ஆண்டு NRHM திட்டத்தின் கீழ் தணிக்கை செய்தபோது, கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பத்தமடை வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குற்ற அலுவலர் திருமதி.வெள்ளையம்மாள் 19.11.2009 முதல் 13.04.2010 வரையிலும் 02.02.2011 முதல் 10.11.2013 வரை ஆகிய இரு காலகட்டங்களில் வட்டார மருத்துவராக பணியில் இருந்த போது NRHM திட்டத்தின் மூலம் பெறப்பட்ட பல்வேறு நிதிகளை சரிவர பராமரிக்காமலும் மேலே சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றாமலும் ஆவணங்களை சரிவர பராமரிக்காமலும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு, பொதுமக்களுக்கும் நோயாளிகளுக்கும் மற்றும் வழிமுறைகள்படி செலவு செய்யப்பட வேண்டிய நிதிகளை கையாடல் செய்த விபரம் 2014ம் ஆண்டு NRHM திட்டத்தின் கீழ் தணிக்கை செய்தபோது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பத்தமடை வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குற்ற அலுவலர் திருமதி.வெள்ளையம்மாள் வட்டார பொறுப்பில் இருந்த போது பத்தமடை வட்டார சுகாதார நிலையத்தில் தேசிய காது கேளாமை தடுப்பு குறித்த பயிற்சி நடத்த துணை இயக்குநரால் வழங்கப்பட்டு வங்கி கணக்கில் செலுத்தப்பட்ட தொகை ரூ.82,300/- தேசிய ஊரக நலக்குழும நிதியில் வரவு வைக்கப்படாமல் பல்வேறு தேதிகளில் செலவு செய்யப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பாக தணிக்கை பாரா 187ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய ஊரக நலக்குழும நிதியில் இருந்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மின்கட்டணம் செலுத்த முன்பணம் ரூ.1,20,000/-யை காசோலை எண்.984334 நாள் 24.07.2013ன்படி தனது காசோலை (Self Cheque) மூலம் எடுத்து மின்கட்டணம், எரி பொருள் செலவு, டெலிபோன் செலவு மற்றும் இதர செலவு என்று கணக்கு காட்டப்பட்டுள்ளது என்றும், அதில் ரூ.82,120யை 30.09.2013ம் தேதி அன்று அரசு கருவூலத்தில் இருந்து பெற்று மருத்துவ அலுவலர் கணக்கில் வரவு வைத்துள்ளார்கள்

என்றும், ஆனால் அந்த தொகையை மீண்டும் தேசிய ஊரக நலக்குழு நிதிக்கு திரும்ப செலுத்தவில்லை என்றும், தேசிய ஊரக நலக்குழும நிதியில் இருந்து எடுக்கப்பட்ட ரூ.1,20,000/-தில் மின்கட்டணம் ரூ.82,120/- போக மீதம் இருக்கும் தொகைக்கு எரிபொருள் செலவு ரூ.20,934/- டெலிபோன் கட்டணம் ரூ.809/- மற்றும் இதர செலவு ரூ.16,137/- என்று காட்டப்பட்டுள்ளது என்றும், ஆனால் இதற்கு உரிய செலவு சீட்டுகள் ஏதும் இல்லை என்றும், இது தொடர்பாக தணிக்கை பாரா 188ல் குறிபிடப்பட்டுள்ளது.

தேசிய ஊரக நலக்குழும நிதியில் இருந்து தனியார் மயக்கவியல் மருத்துவருக்கு மதிப்பூதியம் வழங்கப்பட்டது தொடர்பாக ரூ.1,71,100/- பல்வேறு தேதிகளில் தனது காசோலை (Self Cheque) மூலம் எடுக்கப்பட்டு செலவு செய்யப்படடுள்ளதாக தெரியவருகிறது என்றும், இதுகுறித்து மயக்கவியல் மருத்துவர் திரு.கல்யாணசுந்தரம் என்பவரிடம் கேட்ட போது அவர், 17.11.2011ம் தேதி மயக்கவியல் மருத்துவருக்கு காசோலையாக ரூ.38,650/- வழங்கப்பட்ட பின்பும் அதே பணிக்கு ரொக்கமாக ரூ.1,32,450/- வழங்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் துணை இயக்குனர், சுகாதார பணிகள், திருநெல்வேலி அவர்களிடம் இது குறித்து கேட்ட போது அவர், வட்டார மருத்துவ அலுவலர் ரூபாய் 5,000/-த்திற்கு மேல் செலவு செய்யப்படும் தொகைக்கு தனது காசோலை (Self Cheque) பயன்படுத்தக்கூடாது என்றும் சம்மந்தப்பட்ட நபர்களின் பெயரிலேயே காசோலை கொடுக்கப்படவேண்டும் என்றும் என்.ஆர்.ஹெச்.எம். விதிகளிலேயே சொல்லப்பட்டிருப்பதாகவும் மேலும் மயக்கவியல் மருத்துவர் எத்தகைய நோயாளிகளுக்கு மயக்கவியல் பணியை மேற்கொண்டார் என்ற விபரமும் எந்த விகிதத்தில் தொகை வழங்கப்பட்டது என்ற விபரமும் குறிப்பிடவில்லை என்றும், மேலும் இது தொடர்பாக தணிக்கை பாரா 190ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்தமடை வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் புகை அடித்தலுக்காக எரிபொருளுக்கு ரூ.34,491/-யை செலவு செய்துள்ளார் என்றும், இதற்காக தனது காசோலை (Self Cheques) மூலம் ரூ.30,000/-யை எடுத்து செலவு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் எரிபொருள் பயன்படுத்தியதற்கு எரிபொருள் லாக் புத்தகத்தில் பதிவு ஏதும் சரிவர பராமரிக்கவில்லை என்றும், மேலும் இது தொடர்பாக தணிக்கை பாரா 193ல் குறிபிடப்பட்டுள்ளது.

தேசிய ஊரக நலக்குழும நிதியில் இருந்து பல்வேறு செலவுகளுக்காக தனது காசோலை (Self Cheques) மற்றும் அலுவலக பணியாளர்கள் பெயரில் வங்கியில் இருந்து ரூ.30,54,818/-த்தை 30.10.2007 முதல் 21.05.2013 வரை பல்வேறு காலகட்டங்களில் எடுத்துள்ளார் என்றும், மேற்படி விபரம் தணிக்கை பாரா 194ல் வரிசை எண்.1 முதல் 76 வரை விளக்கப்பட்டுள்ளது என்றும், அதில் குற்ற அலுவலர் பொறுப்பில்

இருந்த காலகட்டத்தில் 11.02.2011ம் முதல் 21.05.2013ம் தேதி வரையிலான செலவுகள் வரிசை எண்.21 முதல் 76 வரை குறிப்பிட்டப்பட்டுள்ளது என்றும், அதில் மொத்தம் ரூ.12,06,54/-க்கு செலவு சீட்டுகள் ஏதும் இல்லை என்றும், தணிக்கை பாரா 194ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக குற்ற அலுவலரிடம் விசாரித்த போது இதில் வரிசை எண். 21, 22, 23, 24 25, 27, 29, 30, 31, 32, 33, 35, 37, 39, 40, 41, 42,43, 44, 45, 46, 47, 48, 50, 51, 52, 53, 55, 57, 58, 59, 60, 61, 62, 63, 64, 65, 66, 68, 71, 72, 73, 74, 75, 76 ஆகியவற்றிக்கு குற்ற அலுவலர் உரிய ஆவணங்களை சமர்பித்து சரி செய்யப்பட்டதாகவும், வரிசை எண்.26, 28, 34, 36, 54, 69, 70, 190, 195, 196, 203 இந்த வரிசை எண்ணில் கொடுப்பட்டுள்ள செலவினங்களுக்கு விளக்கம் ஏதும் கொடுக்க இயலாததால் ரூ.1,28,244/-த்தை திரும்ப தேசிய ஊரக நலக்குழும வங்கி கணக்கில் செலுத்த வேண்டும் என்றும், மேலும் தணிக்கை பாரா 194ல் உள்ள வரிசை எண்.38,56,67ன் படி ரூ.1,69,580/-க்கு எந்த செலவு சீட்டும் இல்லை என்றும், பத்தமடை வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்க வழங்கப்பட்ட நோயாளர் நலச்சங்க நிதியில் இருந்து தனிப்பட்ட நபருக்கு நிதி ஏதும் வழங்கப்பட கூடாது என்பது திட்ட விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது என்றும், ஆனால் குற்ற அலுவலர் 12.09.2012ம் தேதியிட்ட காசோலை எண்.605666ன் படி ரூ.1,20,000/-த்தை முத்துசாமி என்பவருக்கு வழங்கியுள்ளார் என்றும், அதற்குரிய செலவு சீட்டு ஏதும் இல்லை என்றும், தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ள பாரா 187, 188, 194 (38,56,67) ஆகியவற்றில் கூறியுள்ள தொகை மொத்தம் ரூ.3,71,880/-க்கு உரிய செலவு சீட்டு இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர் தன் பதவியை தவறாக பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்து, குற்றமனப்பாண்மையுடன் சட்டவிரோதமான ஆதாயத்திற்காக, தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட தன்னுடைய ஆளுகையின்கீழ் இருந்த அரசு நிதியினை, அதற்கான முறையான ஆவணங்களை வைத்து பராமரிக்காமல் அரசு பணத்தை தன்னுடைய பணமாக மாற்றி பொது ஊழியர் என்ற கடமையில் இருந்து தவறி தவறான குற்ற நடத்தை செய்துள்ளார் என்றும், இவ்வாறு குற்ற நடத்தையில் அரசுக்கு எவ்வளவு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதை கண்டறிய முறையாக வழக்கு பதிவு செய்வதற்குரிய அடிப்படை முதல் நோக்கு ஆதாரங்கள் இருப்பதால் திருநெல்வேலி மாவட்டம் பத்தமடை ஆரம்ப சுகாதார நிலைய முன்னாள் மூத்த உதவி மருவத்துவர் திருமதி.ஆர்.வெள்ளையம்மாள் என்பவர் மீது இந்திய தண்டனை சட்டப்பிரிவு 409, 420 மற்றும் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 13(2) r/w 13(1)(C)-ன்படி திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 11/2020 ஆக வழக்கு பதிவு செய்யப்படுகின்றது.

The original FIR was sent to the Hon'ble Special Judge for Trial of cases under the Prevention of Corruption Act, Tirunelveli and other FIR copies to concerned higher officials.

23/12/20
D. Robin Gnanasingh
Inspector of Police
V&AC, Tirunelveli.